# ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் உரை

**துல்ஹஜ் 10, 1447 ஹிஜ்ரி / 27-05-2026**

நிச்சயமாகப் புகழனைத்தும் அல்லாஹ்விற்கே உரியது. நாம் அவனைப் புகழ்கிறோம்; அவனிடமே உதவியும், பாவமன்னிப்பும் தேடுகிறோம். நமது உள்ளங்களின் தீமைகளிலிருந்தும், நமது தீய செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். அல்லாஹ் யாரை நேர்வழியில் செலுத்துகிறானோ அவரை வழிகெடுப்பவர் எவருமில்லை. அவன் யாரை வழிகேட்டில் விடுகிறானோ அவரை நேர்வழியில் செலுத்துவோர் எவருமில்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

{يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ} [آل عمران: ١٠٢]

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்." (அல் குர்ஆன் 3 : 102)

الله أكبر الله أكبر الله أكبر، الله أكبر الله أكبر الله أكبر، اللهُ أَكْبَرُ الله أكبر الله أكبر

அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன் அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்;அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்

அல்லாஹ் மிகப் பெரியவன், கணக்கிட முடியாத பல நோக்கங்களுக்குகாக அவன் பெருநாள் காலங்களை ஏற்படுத்தினான். அல்லாஹ் மிகப் பெரியவன், ஒவ்வொரு பெருநாளிலும் மீண்டு வருகின்ற, வெளிப்படுகின்ற அவனது அருட்கொடைகளை நம் மீது பொழிந்தான். அல்லாஹ் மிகப் பெரியவன்; ஹாஜிகள் இஹ்ராம் அணிந்து உம்ரா செய்ததற்கெல்லாம் அவன் பெரியவன். அல்லாஹ் மிகப் பெரியவன்; ஹாஜிகள் அரஃபா மைதானத்தில் நின்றதற்கெல்லாம், இன்னும் அல்லாஹ்விற்காக குர்பானி கொடுத்து அறுத்தவர்களுக்கெல்லாம் அவன் பெரியவன்.

**அம்மா பஃது (இதற்குப் பின்னால்) :- அல்லாஹ்வின் அடியார்களே!**

இதோ, பெருநாள் தினம் வந்துவிட்டது! இதனால் இறைநம்பிக்கையாளர்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியடைகின்றன; இறையச்சமுடையோரின் கண்கள் குளிர்ச்சியடைகின்றன. இதோ, இதுதான் நஹ்ருடைய (குர்பானி கொடுக்கும்) தினம்; ஹஜ்ஜுல் அக்பர் எனும் (மகா ஹஜ்ஜின்) தினம்; வணக்க வழிபாடுகளில் மிகச் சிறந்ததும், மக்கள் அதிகமாகக் கூடுகின்ற தினமுமாகும். எனவே, இறைநம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் கண்ணியமான வாக்குறுதியைக் கொண்டும், அவனது அழகான அருளைக் கொண்டும், அவனது விசாலமான கருணையையும் கொடைக் குணத்தையும் கொண்டும் மகிழ்ச்சியடையட்டும்.

{قُلْ بِفَضْلِ اللَّهِ وَبِرَحْمَتِهِ فَبِذَٰلِكَ فَلْيَفْرَحُوا هُوَ خَيْرٌ مِمَّا يَجْمَعُونَ} [يونس: ٥٨]

(நபியே!) "கூறுவீராக: அல்லாஹ்வின் அருளினாலும், அவனது கருணையினாலும்—அதைக் கொண்டே அவர்கள் மகிழ்ச்சியடையட்டும். அவர்கள் சேகரித்து வைப்பதை விட அதுவே மிகச் சிறந்ததாகும்." (அல் குர்ஆன் 10 : 58)

اللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ، لَا إِلَهَ إِلَّا اللهُ، وَاللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ و لله الحمد

(பொருள்: அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், புகழனைத்தும் அல்லாஹ்விற்கே உரியது.)

**முஸ்லிம்களின் சமூகமே!**

ஹஜ்ஜின் மிக உன்னதமான நோக்கங்களிலும், அதன் வழிபாட்டுத் தலங்களின் மிக உயர்ந்த குறிக்கோள்களிலும் ஒன்று: அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதை (தவ்ஹீதை) வெளிப்படுத்துவதும், அவனுக்கு மட்டுமே வணக்கம் செய்வதை தனித்துவப்படுத்துவதுமாகும்; தூய்மையான எண்ணத்தோடும், அன்போடும், பயத்தோடும், நம்பிக்கையோடும், ஆசையோடும், அச்சத்தோடும் (அவனை மட்டுமே வணங்க வேண்டும்). நபி (ஸல்) அவர்களின் ஹஜ்ஜைப் பற்றி விவரிக்கும் போது ஜாபிர் (ரழி) அவர்கள் கூறினார்கள்:

فَأَهَلَّ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِالتَّوْحِيدِ: لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، لَبَّيْكَ لَا شَرِيكَ لَكَ لَبَّيْكَ، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ، لَا شَرِيكَ لَكَ» [رواه مسلم]

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தவ்ஹீதைக் கொண்டு தல்பியா கூறினார்கள். லப்பைக்கல்லாஹுைம்ம லப்பைக், லப்பைக்க லா ஷரீக்க லக லப்பைக், இன்னல் ஹம்த வந்நிஃமத லக வல்முல்க், லா ஷரீக்க லக். பொருள்: இதோ உனது கட்டளைக்கு இணங்கி வந்துவிட்டேன் இறைவா, இதோ வந்துவிட்டேன். உனக்கு இணையானவர் எவருமில்லை, இதோ வந்துவிட்டேன். நிச்சயமாகப் புகழும், அருட்கொடையும், ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையானவர் எவருமில்லை."

எனவே, அல்லாஹ்வையே உங்களது சேமிப்பாகவும், புகலிடமாகவும், இலக்காகவும், நீங்கள் அஞ்சும் போது தஞ்சம் அடையும் இடமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில், யார் அல்லாஹ்வைச் சார்ந்து வாழ்கிறாரோ அவருக்கு அவன் போதுமானவன்; யார் அவனை நம்புகிறாரோ அவரை அவன் பாதுகாக்கிறான்; யார் அவனிடம் தஞ்சம் புகுகிறாரோ அவரை அவன் பாதுகாத்துத் தன் பொறுப்பில் எடுத்துக்கொள்கிறான்.

وَإِنْ يَمْسَسْكَ اللَّهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهُ إِلَّا هُوَ ۖ وَإِنْ يَمْسَسْكَ بِخَيْرٍ فَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ * وَهُوَ الْقَاهِرُ فَوْقَ عِبَادِهِ ۚ وَهُوَ الْحَكِيمُ الْخَبِيرُ} [الأنعام: ١٧، ١٨] {

"அல்லாஹ் உமக்கு ஏதேனும் ஒரு துன்பத்தை ஏற்படுத்தினால், அவனைத் தவிர அதை நீக்குபவர் எவருமில்லை. அவன் உமக்கு ஏதேனும் ஒரு நன்மையை ஏற்படுத்தினால், அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன் ஆவான். மேலும், அவன் தன் அடியார்களுக்கு மேலாக அடக்கியாள்பவன்; அவன் மிக்க ஞானமுடையவன், நன்கறிந்தவன்."(அல் குர்ஆன் 6 : 17,18)

எனவே உங்களது தொழுகை, நோன்பு, ஹஜ் மற்றும் அறுத்துப் பலியிடுதல் (குர்பானி) ஆகியவற்றை அல்லாஹ்விற்காக மட்டுமே தூய்மையாக்குங்கள். உங்களது உள்ளங்களில் அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துங்கள்; உங்களது அனைத்துக் காரியங்களையும் அவனிடமே ஒப்படையுங்கள். அல்லாஹ்வைத் தவிர மற்ற அனைத்திலிருந்தும் உங்களது உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள். ஏனெனில், மனிதர்களைப் பற்றி அறிந்தவர் அவர்களை அவர்களுக்குரிய தகுதிகளில் நிறுத்துவார்; அல்லாஹ்வை அறிந்தவரோ அவனுக்கு மட்டுமே தனது வணக்கவழிபாட்டைத் தூய்மையாக்குவார்.

الله أكبر الله أكبر الله أكبر لَا إِلَهَ إِلَّا اللَّهُ، وَاللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ

(பொருள்: அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்

தவிர வேறு யாருமில்லை அல்லாஹ் மிகப் பெரியவன், புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே!

**முஸ்லிம்களே!**

ஹஜ்ஜின் மகத்தான நோக்கங்களிலும், அதன் உன்னதமான ஞானங்களிலும் மற்றொன்று: காஃபிர்களுக்கும், முஷ்ரிக்குகளுக்கும் (இறைமறுப்பாளர்களுக்கும், இணைவைப்பாளர்களுக்கும்) அவர்களின் வழிபாடுகள், பெருநாட்கள் மற்றும் பழக்கவழக்கங்களில் இருந்து மாறுபடுவதாகும்.

{وَأَذَانٌ مِنَ اللَّهِ وَرَسُولِهِ إِلَى النَّاسِ يَوْمَ الْحَجِّ الْأَكْبَرِ أَنَّ اللَّهَ بَرِيءٌ مِنَ الْمُشْرِكِينَ ۙ [التوبة: ٣]}

"மகா ஹஜ்ஜுடைய நாளில் அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் மனிதர்களுக்கு அறிவிக்கப்படுவதாவது: நிச்சயமாக அல்லாஹ் இணைவைப்பவர்களை விட்டும் விலகியவன்; அவனது தூதரும் (அவர்களை விட்டும் விலகியவர்) ஆவார்." (அல் குர்ஆன் 9 : 3)

இதோ, நபி (ஸல்) அவர்கள் தங்களது ஹஜ்ஜில் அவர்களுக்கு (அதாவது இணைவைப்பாளர்களுக்கு)மாறுபடுவதையேநோக்கமாகக்கொண்டார்கள். நபி அவர்கள் அரஃபாவில் நின்றார்கள். ஆனால் குறைஷிகள் அங்கு நிற்க மாட்டார்கள். முஷ்ரிக்குகள் சூரியன் உதித்ததற்குப் பின்பே முஸ்தலிஃபாவிலிருந்து புறப்படுவார்கள்; ஆனால் நபியவர்கள் அவர்களுக்கு மாறுபட்டு, சூரியன் உதிப்பதற்கு முன்பே அங்கிருந்து புறப்பட்டார்கள். மேலும் அவர்கள் 'வாதி முஹஸ்ஸிர்' என்ற பள்ளத்தாக்கில் நின்று கொண்டு தங்கள் தந்தைமார்களைப் பற்றியும், தங்களின் பெருமைகளைப் பற்றியும் பெருமையடித்துக் கொள்வார்கள். நபியவர்கள் அவர்களுக்கு மாறுபட்டு, அந்த இடத்தைக் கடந்தபோது வேகமாகச் சென்றார்களே தவிர அங்கு நிற்கவில்லை. இதற்கெல்லாம் பிறகும், ஒரு முஸ்லிம் காஃபிர்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கும் ஒப்புவமையாக நடக்கலாமா? திண்ணமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

مَنْ تَشَبَّهَ بِقَوْمٍ فَهُوَ مِنْهُمْ» [رواه أبو داود وصححه الألباني]«

"யார் ஒரு சமூகத்திற்கு ஒப்புவமையாக நடக்கிறாரோ, அவர் அவர்களைச் சேர்ந்தவரே ஆவார்." (நூல் : அபூதாவூத்)

மாறாக, அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகின்ற ஒருவர் மீது கடமை என்னவெனில், அவர் தனது மார்க்கத்தைக் கொண்டு பெருமிதம் கொள்ள வேண்டும்; அதன் அடையாளங்களை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்; தன் இறைவனுக்கு முழுவதுமாக அடிமைத்தனத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**முஸ்லிம்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இறைநம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் அவனது புனித இல்லத்தைக் (கஃபாவை) காண்பதற்கான ஏக்கத்தையும், அவனிடம் விருந்தினராகச் செல்வதற்கும் அவனது வழிபாட்டுத் தலங்களில் நிற்பதற்குமான ஆவலையும் ஏற்படுத்தியிருக்கும் அதே வேளையில் ஒவ்வொருவராலும் ஒவ்வொரு வருடமும் ஹஜ் செய்ய முடிவதில்லை என்பதால், இந்தக் காலத்தில் ஹாஜிகளும், ஹாஜிகள் அல்லாதோரும் ஒன்றாகப் பங்கெடுக்கும் சில நற்செயல்களை அவன் ஏற்படுத்தியுள்ளான். அவைதான் தஹ்லீல் (லா இலாஹ இல்லல்லாஹ் கூறுவது), தக்பீர் (அல்லாஹ் அக்பர் கூறுவது), மற்றும் தஹ்மீத் (அல்ஹம்துலில்லாஹ் கூறுவது) என்பனவாகும். இப்னு உமர் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்.

« مَا مِنْ أَيَّامٍ أَعْظَمُ عِنْدَ اللَّهِ، وَلَا أَحَبُّ إِلَيْهِ مِنَ الْعَمَلِ فِيهِنَّ مِنْ هَذِهِ الأَيَّامِ الْعَشْرِ، فَأَكْثِرُوا فِيهِنَّ مِنَ التَّهْلِيلِ، وَالتَّكْبِيرِ، وَالتَّحْمِيدِ» [رواه أحمد وصححه أحمد شاكر]

"அல்லாஹ்விடத்தில் மிக மகத்தான நாட்களோ, அல்லது அவனுக்கு மிக விருப்பமான நற்செயல்கள் புரியும் நாட்களோ இந்த (துல்ஹஜ்) பத்து நாட்களை விட வேறு எதுவுமில்லை. எனவே, இந்த நாட்களில் தஹ்லீல், தக்பீர், தஹ்மீத் ஆகியவற்றை அதிகமாகக் கூறுங்கள்." (நூல் : அஹ்மத் )

மேலும், ஹாஜிகளுக்கும், ஹாஜிகள் அல்லாதோருக்கும் ஹத்யு மற்றும் உதஹிய்யா (குர்பானி) பிராணிகளின் இரத்தங்களை ஓட்டுவது (அதாவது அறுப்பது) அல்லாஹ்விடம் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், அவனைக் கண்ணியப்படுத்துவதற்காகவும் மார்க்கமாக்கப்பட்டுள்ளது. இது அல்லாஹ்விற்கு முற்றிலும் கட்டுப்பட்டு வாழ்ந்த இப்றாஹீம் கலீலுல்லாஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் பின்பற்றுவதாகும். அல்லாஹ் கூறுகிறான்.

{ذَٰلِكَ وَمَنْ يُعَظِّمْ شَعَائِرَ اللَّهِ فَإِنَّهَا مِنْ تَقْوَى الْقُلُوبِ} [الحج: ٣٢]

"அதுதான் (இறைக்கட்டளை); மேலும், எவர் அல்லாஹ்வின் அடையாளங்களை கண்ணியப்படுத்துகிறாரோ, நிச்சயமாக அது உள்ளங்களின் இறையச்சத்தினால் ஏற்படுவதாகும்." (அல் குர்ஆன் 22 : 32)

எனவே, ஒரு முஸ்லிம் தன் சார்பாகவும், தன் குடும்பத்தார் சார்பாகவும் குர்பானி கொடுப்பதும், மார்க்க ரீதியாகக் குறிக்கப்பட்ட நேரத்தில் அதனை அறுப்பதும் சட்டமாக்கப்பட்டுள்ளது. பெருநாள் தொழுகைக்கு முன்னால் அதனை அறுப்பது அனுமதியில்லை. குர்பானி அறுப்பதற்கான நேரம் அய்யாமுத் தஷ்ரீக் நாட்களின் மூன்றாவது நாளின் சூரியன் மறையும் நேரத்துடன் முடிவடைகிறது. எனவே, யார் இன்னும் குர்பானி பிராணியை வாங்கவில்லையோ அல்லது இன்னும் நிய்யத் செய்யவில்லையோ அவர் விரைந்து செயல்படட்டும். ஏனெனில் இன்னும் நேரத்தில் விசாலமுள்ளது. அல்லாஹ் கூறுகிறான்.

{لَنْ يَنَالَ اللَّهَ لُحُومُهَا وَلَا دِمَاؤُهَا وَلَٰكِنْ يَنَالُهُ التَّقْوَىٰ مِنْكُمْ} [الحج: ٣٧]

"அவற்றி(அதாவதுகுர்பானிபிராணியி)ன் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை; மாறாக, உங்களிடமிருந்தான இறையச்சமே அவனைச் சென்றடைகிறது." (அல் குர்ஆன் 22 : 36)

எனவே அதில் இருந்து நீங்கள் உண்பதும், அன்பளிப்புச் செய்வதும், தர்மம் செய்வதும் சுன்னத்தாகும். ஏனெனில் அல்லாஹ் கூறியுள்ளான். "நீங்களும் உண்ணுங்கள் (வறுமையிலும் கையேந்தாமல் இருப்பதைக் கொண்டு) திருப்தியாய் இருப்போருக்கும், இரப்போருக்கும் உண்ணக்கொடுங்கள். (அல் குர்ஆன் 22 : 36)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் இந்த மகத்தான குர்ஆனில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் ஞானமிக்க நினைவூட்டல்களைக் கொண்டு எனக்கும் உங்களுக்கும் பயனளிப்பானாக! எனது இந்த வார்த்தையைக் கூறி, எனக்காகவும் உங்களுக்காகவும் அனைத்துப் பாவங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். நீங்கள் அவனிடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்; நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவனாகவும், நிகரற்ற கருணையுடையவனாகவும் இருக்கிறான்.

# இரண்டாவது உரை

அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்விற்கே புகழனைத்தும் உரித்தாகுக! வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்று சாட்சி கூறுகிறேன். மேலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன். அல்லாஹ் அவர் தம் குடும்பத்தாரோடும், தோழர்கள் அனைவரோடும் சேர்த்து அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் பொழிவானாக!

الله أكبر الله أكبر الله أكبر، الله أكبر الله أكبر الله أكبر، الله أكبر

அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்.

**அம்மா பஃது, முஸ்லிம்களே!**

உங்களது பெருநாளைத் தக்பீரைக் கொண்டும், தஹ்லீலைக் கொண்டும் அலங்கரியுங்கள். தஸ்பீஹ் (ஸுப்ஹானல்லாஹ்) மற்றும் தஹ்மீத் (அல்ஹம்துலில்லாஹ்) ஆகியவற்றைக் கொண்டு நாவுகளால் நினையுங்கள்.

وَاذْكُرُوا اللَّهَ كَثِيرًا لَعَلَّكُمْ تُفْلِحُونَ} [الأنفال: ٤٥]}

"நீங்கள் வெற்றியடையும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள்." (அல் குர்ஆன் 8 : 45)

மேலும் நபீஷா அல்-ஹுதலீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

أَيَّامُ التَّشْرِيقِ أَيَّامُ أَكْلٍ وَشُرْبٍ وَذِكْرٍ لِلَّهِ» [رواه مسلم]»

"அய்யாமுத் தஷ்ரீக் (பெருநாளை அடுத்த மூன்று) நாட்கள் என்பவை உண்பதற்கும், பருகுவதற்கும், அல்லாஹ்வை நினைவு கூர்வதற்குமான நாட்களாகும்." (நூல் : முஸ்லிம்)

உங்களது குடும்பத்தினருக்கும், உங்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துங்கள். பெருநாளின் மகிழ்ச்சியை அல்லாஹ்வின் மீதான பயத்தோடும், இறையச்சத்தோடும் இணைந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் ஹராமாக்கிய காரியங்களில் உங்களது

செல்வங்களை வீணடிக்காதீர்கள். உக்பா இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

يَوْمُ عَرَفَةَ، وَيَوْمُ النَّحْرِ، وَأَيَّامُ التَّشْرِيقِ، عِيدُنَا أَهْلَ الإِسْلَامِ» [رواه الترمذي وقال: حسن صحيح]

"அரஃபா நாளும், நஹ்ருடைய (பெருநாள்) நாளும், அய்யாமுத் தஷ்ரீக் நாட்களும் இஸ்லாமிய மக்களாகிய நம்முடைய பெருநாட்களாகும்." (நூல் : திர்மிதி )

இதன் காரணமாகவே, (துல்ஹஜ்) 11, 12, 13 ஆகிய நாட்களில் நோன்பு நோற்பதை அல்லாஹ் ஹராமாக்கினான்; ஹாஜிகளில் குர்பானி பிராணி கிடைக்காதவர்களைத் தவிர.

இந்தப் பெருநாளில் உங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்; கடந்து போன துக்கங்களை இதில் புதுப்பிக்காதீர்கள். இந்தப் பெருநாளில் உறவினர்களைச் சேர்ந்து வாழுங்கள்; பிணக்குகளுக்குப் பகரமாக அன்பையும் நெருக்கத்தையும் ஏற்படுத்துங்கள். உங்களது பிரிவினைகளைச் சீர்செய்யுங்கள்; உங்களது சிதறல்களை ஒன்றிணையுங்கள்; குரோதங்களைக் கைவிடுங்கள்; பகைகளை மறந்துவிடுங்கள்; ஒருவருக்கொருவர் மன்னித்துக் கொள்ளுங்கள்; பரஸ்பரம் கருணை காட்டிக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் அடியார்களாகிய நீங்கள் சகோதரர்களாக ஆகிவிடுங்கள். இணக்கமாக வாழுங்கள், கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள்.

وَلَا تَنَازَعُوا فَتَفْشَلُوا وَتَذْهَبَ رِيحُكُمْ ۖ وَاصْبِرُوا ۚ إِنَّ اللَّهَ مَعَ الصَّابِرِينَ} [الأنفال: ٤٦]}

"அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளாதீர்கள்; அவ்வாறு செய்தால் நீங்கள் தைரியமிழந்து விடுவீர்கள், உங்களது பலமும் போய்விடும். மேலும் பொறுமையாக இருங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்." (அல் குர்ஆன் 8: 46)

**முஸ்லிம் பெண்களின் சமூகமே!**

இறையச்சம், வெட்கம், ஒழுக்கம் மற்றும் கற்புடைமை ஆகியவற்றைக் கொண்டு உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள். போலி அழகு மற்றும் கற்பனையான அலங்காரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அல்லாஹ் கூறுகிறான்.

وَأَنْ يَسْتَعْفِفْنَ خَيْرٌ لَهُنَّ} [النور: ٦٠]

"அவர்கள் தங்களைக் கற்போடு பேணிக்கொள்வது அவர்களுக்கு மிகவும் நன்மையானதாகும்." (அல் குர்ஆன் 24: 60)

இறைநம்பிக்கையுடைய பெண்களின் நற்குணங்களையும், ஸாலிஹான (நல்லொழுக்கமுள்ள) பெண்களின் ஆடையையும், தூய்மையான பெண்களின் ஆபரணத்தையும் கடைப்பிடியுங்கள்.

وَلِبَاسُ التَّقْوَىٰ ذَٰلِكَ خَيْرٌ ۚ ذَٰلِكَ مِنْ آيَاتِ اللَّهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُونَ} [الأعراف: ٢٦]

"ஆனால் இறையச்சம் எனும் ஆடையே மிகவும் மேலானது. அது அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளதாகும்; அவர்கள் நல்லறிவு பெறுவதற்காக."(அல் குர்ஆன் 8: 26)

اللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ، لَا إِلَهَ إِلَّا اللهُ، وَاللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ، وَلِلَّهِ الحَمْدُ

அல்லாஹ் மிகப் பெரியவன்,அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அல்லாஹ் மிகப் பெரியவன் இன்னும் புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே.

**அல்லாஹ்வின் அடியார்களே!**

குர்பானி கொடுங்கள், அல்லாஹ் உங்களது குர்பானிகளை ஏற்றுக் கொள்வானாக! உங்களைப் படைத்தவனுக்காகவும், உங்களது எஜமானனுக்காகவும் அவற்றின் இரத்தங்களை ஓட்டுங்கள்; மனத்திருப்தியோடு அதைச் செய்யுங்கள். அல்லாஹ் நம்மிடமிருந்தும் உங்களிடமிருந்தும் நற்செயல்களை ஏற்றுக் கொள்வானாக! உங்களது பெருநாள் பாக்கியமிக்கதாக அமையட்டும்! அல்லாஹ் உங்களுடைய உழைப்பை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், உங்களது பாவங்களை மன்னிக்கப்பட்டதாகவும் ஆக்குவானாக! உங்களது பெருநாளில் மகிழ்ச்சியையும், இன்பத்தையும், பொலிவையும், சந்தோஷத்தையும் அதிகப்படுத்துவானாக!

யா அல்லாஹ்! ஒளிபொருந்திய முகத்திற்கும், பிரகாசமான நெற்றிக்கும் உடையவராகிய (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் பொழிவாயாக! யா அல்லாஹ்! எங்களுக்கு ஈமானை (இறைநம்பிக்கையை) நேசத்திற்குரியதாக்கு, அதனை எங்கள் உள்ளங்களில் அழகாக்கு; மேலும் குஃப்ர் (இறைமறுப்பு),

புஸூக் (பாவங்கள்), மற்றும் அஸியான் (மாறுசெய்தல்) ஆகியவற்றை எங்களுக்கு வெறுப்பானதாக ஆக்கு; எங்களை நேர்வழி பெற்றவர்களில் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கண்ணியத்தை வழங்கு; ஷிர்க்கையும் முஷ்ரிக்குகளையும் இழிவுபடுத்து; உனது மார்க்கத்தையும், உனது வேதத்தையும், உனது நபியின் சுன்னத்தையும், உனது முஃமினான அடியார்களையும் வெற்றிபெறச் செய்வாயாக!

யா அல்லாஹ்! முஸ்லிம்களான ஆண்களையும் பெண்களையும், முஃமினான ஆண்களையும் பெண்களையும், அவர்களில் உயிரோடு இருப்பவர்களையும் மரணித்தவர்களையும், மன்னித்தருள்வாயாக! உனது புனித இல்லத்திற்கு ஹஜ் செய்ய வந்த ஹாஜிகளை அனைத்து தீமைகளிலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பாயாக! அவர்களை நன்மைகளைப் பெற்றவர்களாக, பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக, மனநிறைவு பெற்றவர்களாகத் தங்களின் ஊர்களுக்குப் பத்திரமாகத் திரும்பச் செய்வாயாக! யா அல்லாஹ்! எங்கள் அமீரையும், அவரது வாரிசையும் உனது நேர்வழியின் பால் வழிநடத்துவாயாக! அவர்கள் இருவரின் செயல்களையும் உனது இச்சையப்படியும், உனது பொருத்தத்திற்குரியதாகவும் ஆக்குவாயாக! இந்த நாட்டை அமைதியானதாகவும், நிம்மதியானதாகவும், வளம் கொழிப்பதாகவும், பாதுகாப்பு மற்றும் ஈமானின் இருப்பிடமாகவும் ஆக்குவாயாக! அவ்வாறே மற்ற அனைத்து முஸ்லிம்களின் நாடுகளையும் ஆக்குவாயாக!

**(ஜுமுஆ மற்றும் பெருநாள் தொழுகைக்கான மாதிரி உரை தயாரிப்புக் குழு)**